# முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மண்டலப் பொறுப்பாளர்கள் - கழக நிர்வாகிகளுடன் சந்திப்பு!

## ஓரணியில் தமிழ்நாடு மற்றும் தேர்தல் களப்பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.



சென்னை, ஜூலை 27 -

**முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் நேற்று அப்போலோ மருத்துவமனையில் தி.மு.க. மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகளை அழைத்து ஆலோசனை நடத்தினார்.**

தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற முன்னெடுப்பில் அதிகமான மக்களை இணைத்து மாபெரும்வெற்றி அடைந்து வருவதற்கு காரணமான கழக உடன்பிறப்புகளுக்கு பாராட்டு தெரிவித்த கழகத்தலைவர் அவர்கள் 150 தொகுதிகளில் 30% உறுப்பினர் சேர்க்கை என்ற இலக்கை அடைந்ததுள்ளதையும் சுட்டிக்காட்டி பாராட்டினார். அதே சமயம் உறுப்பினர் சேர்க்கையில் பின் தங்கியுள்ள ஓரிரு மாவட்டங்கள், தொகுதிகளைக் குறிப்பிட்டு அவற்றை மண்டலப் பொறுப்பாளர்கள் கவனித்துச் சரிசெய்யுமாறு அறிவுறுத்தினார்.

சில பாகங்களில் உறுப்பினர் சேர்க்கை விவரங்களில் சில குறைபாடுகள் இருப்பதை சுட்டிக்காட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட வாக்குச்சாவடிகளில் மீண்டும் முதலில் இருந்து உறுப்பினர் சேர்க்கையை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்.

வீடு வீடாகச் செல்லும் போது மக்களிடையே கிடைக்கும் வரவேற்பு, திராவிட மாடல் அரசின் திட்டங்கள் குறித்து மகிழ்ச்சியுடன் மக்கள் பேசுவது ஆகியவற்றை மண்டலப் பொறுப்பாளர்கள் விளக்கினர்.

இக்கலந்துரையாடலில் முதலமைச்சர் அவர்கள் "உங்களுடன்ஸ்டாலின்"திட்டத்திற்குமக்களிடையே கிடைத்துள்ள வரவேற்பு குறித்தும் கேட்டறிந்தார்.

புதுப்பிக்கப்பட்ட தூத்துக்குடி விமான நிலையம் திறப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாட்டிற்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று (26.7.2025) தூத்துக்குடி விமான நிலையத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் . தங்கம் தென்னரசு வரவேற்றார். உடன் ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் எல். முருகன் உள்ளார்.



## மருத்துவமனையில் ஓய்வெடுக்க மனமில்லைதான் - இருப்பினும் களச் செயல்பாடுகள் குறித்து பொறுப்பாளர்களிடம் ஆலோசித்தேன்!

# உறுப்பினர் சேர்க்கையில் 150 தொகுதிகளில் நம் இலக்கை எட்டிய செய்தியால் உற்சாகம் பெற்றேன்!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் மகிழ்ச்சி!

சென்னை, ஜூலை 27-

மருத்துவர்கள் வற்புறுத்தினாலும் எனக்கு மருத்துவமனையில் ஓய்வெடுக்க மனமில்லை எனவும், உயிரான கழகத்தின் களச் செயல்பாடுகள் குறித்து மண்டலப் பொறுப்பாளர்களிடம் ஆலோசித்த போது உறுப்பினர் சேர்க்கையில் 150 தொகுதிகளில் நம் இலக்கை எட்டிய இன்பச் செய்தியை பகிர்ந்த போது ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு குறித்து ஆலோசனைகளை வழங்கி உற்சாகம் பெற்றேன் எனவும், தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகிழ்ச்சி பொங்க குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:-

**கழக உடன்பிறப்புகள் களத்தில் ஓய்வின்றி களமாடிக் கொண்டிருக்கும் போது, மருத்துவர்கள் வற்புறுத்தினாலும் எனக்கு மருத்துவமனையில் ஓய்வெடுக்க மனமில்லை!**

**உயிராக நம்மை இயக்கும் கழகத்தின் களச் செயல்பாடுகள் குறித்து மண்டலப் பொறுப்பாளர்களிடம் ஆலோசித்தபோது, உறுப்பினர் சேர்க்கையில் 150 தொகுதிகளில் நம் இலக்கை எட்டிய இன்பச் செய்தியை அவர்கள் பகிர, ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு குறித்த ஆலோசனைகளை வழங்கி உற்சாகம் பெற்றேன்!**

இவ்வாறு தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ்

# கிராமப்புற சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையங்கள், தமிழ்நாட்டில், முறையாகச் செயல்படுகின்றனவா?

## மக்களவையில் - டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 27-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 25 சூலை 2025 அன்று மக்களவையில், தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும், கிராமப்புற சுய வேலை வாய்ப்பு பயிற்சி மையங்கள்முறையாக கண்காணிக்கப்படுகிறதா? என்றும் இதனால் எவ்வளவு பெண் தொழில் முனைவோர் பயனடைந்துள்ளனர்? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் சிறு குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை இணையமைச்சர் திருமதி குமாரி சோபா கரந்தலே அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சிறு குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :-

தீனதாயாள் தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ், கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் வகையில் 37 கிராமப்புற சுய வேலை வாய்ப்பு பயிற்சி தமிழ்நாட்டில் மையங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும் அவற்றில் தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, ஊறுகாய் தயாரிப்பு, புகைப்படகலை, காளான் வளர்ப்பு, கணிணி தொழில் நுட்பம், கைப்பேசி மையங்கள் போன்ற 60க்கும் மேற்பட்ட தொழில் முனை வோருக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்றும், மக்களவையில் இணையமைச்சர் தெரிவித்தார்,

மேலும், கடந்த பத்தாண்டுகளில், தொழில் முனைவோர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 60க்கும் மேற்பட்ட பயிற்சிகளின் மூலம் 30,000க்கும் அதிகமான பெண் தொழில் முனைவோர் உள்பட, 56000க்கும் அதிகமான தொழில் முனைவோர்களுக்கான பயிற்சி, தமிழ்நாட்டு கிராமப்புறங்களில் வழங்கப்பட்டு உள்ளது என்ற அமைச்சர் தெரிவித்தார்.

கிராமப்புற சுய வேலை வாய்ப்பு பயிற்சி மையங்களின் மூலம் பயிற்சி பெறும் தொழில் முனைவோர்கள், தயாரிப்பு, நிதி மேலாண்மை, சந்மைபடுத்துதல், வங்கி கடன் பெறுதல், அரசு விதிகளை கடைபிடித்தல் போன்ற அனைத்து துறைகளிலும் பயிற்சி அளிக்கப்படுவதால் சொந்தமாக தொழில் துவங்குவதிலும் பிறருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதிலும் சிறந்து விளங்குகின்றார்கள், என்றும் அவர்களுக்கு பயிற்சி முடிந்தவுடன் உரிய சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது என்றும், ஒன்றிய அரசின் சிறு குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை இணையமைச்சர் திருமதி குமாரி சோபா கரந்தலே அவர்கள், மக்களவையில் தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

## போத்தனூர் ரயில் நிலையம்

# கோயம்புத்தூரின் இரண்டாவது சந்திப்பாக எப்போது மாற்றப்படும்?

## மக்களவையில் - முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 27-

போத்தனூர் ரயில் நிலையம் கோயம்புத்தூர் இரண்டாவது சந்திப்பாக மாற்றப்படும் என்று அரசிடம் ஏதேனும் முன்மொழிவு உள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள்?,

போத்தனூர் ரயில் நிலையம் உட்பட சேலம் கோட்டத்தில் உள்ள பல்வேறு ரயில் நிலையங்களில் அமிர்த பாரத் திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிகள் நடைபெறுகின்றனவா?

மேற்படி நிலையத்தில் பல்வேறு அபிவிருத்தி மற்றும் உள்கட்டமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதி, அனைத்துப் பணிகளும் முடிவடைந்து, அந்த ரயில் நிலையம் கோயம்புத்தூர் இரண்டாவது சந்திப்பாக எப்போது மாற்றப்படும் என்று கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் கேள்வி எழுப்பினார்.

இரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஸ்ரீ அஷ்வினி வைஷ்ணவ் பதில் ரயில்வே அமைச்சகம் அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. நீண்ட கால அணுகுமுறையுடன் தொடர்ச்சியான அடிப்படையில் நிலையங்களின் வளர்ச்சியை இது கருதுகிறது. இது மாஸ்டர் தயாரிப்பை உள்ளடக்கியது

ஸ்டேஷன் அணுகல், சுற்றும் பகுதிகள், காத்திருப்பு கூடங்கள், கழிப்பறைகள், லிப்ட், எஸ்கலேட்டர்கள், தளத்தின் மேல் பிளாட்பார்ம் மற்றும் கவர், தூய்மை, இலவச வைஃபை, உள்ளூர் தயாரிப்புகளுக்கான கியோஸ்க் போன்ற ‘ஒரே நிலையம் ஒரு தயாரிப்பு’ போன்ற திட்டங்களின் மூலம் ரயில் நிலையங்களில் வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மற்றும் அவற்றை கட்டம் கட்டமாக செயல்படுத்துதல். ஒவ்வொரு நிலையத்திலும் உள்ள அவசியத்தை கருத்தில் கொண்டு

இத்திட்டம், கட்டிடத்தை மேம்படுத்துதல், நகரின் இருபுறமும் ரயில் நிலையத்தை ஒருங்கிணைத்தல், பன்முக ஒருங்கிணைப்பு, திவ்யாஞ்ஞர் களுக்கான வசதிகள், நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த தீர்வுகள், பேலஸ்ட்லெஸ் டிராக்குகளை வழங்குதல், முதலியன தேவை, கட்டம் மற்றும் சாத்தியக்கூறு மற்றும் நீண்ட காலத்திற்கு ஸ்டேஷனில் நகர மையத்தை உருவாக்குதல் போன்றவற்றையும் திட்டமிடுகிறது..

இதுவரை, தெற்கு ரயில்வேயின் சேலம் கோட்டத்தின் போத்தனூர் ரயில் நிலையம் உட்பட 1,337 ரயில் நிலையங்கள் இத்திட்டத்தின் கீழ் வளர்ச்சிக்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. தெற்கு ரயில்வேயின் சேலம் கோட்டத்தில் அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்தின் கீழ் மேம்பாட்டிற்காக அடையாளம் காணப்பட்ட நிலையங்களின் பெயர்கள் பின்வருமாறு:

சேலம் பிரிவு, அம்ரித் நிலையங்களின் எண்ணிக்கை 16, அம்ரித் நிலையங்களின் பெயர்கள் பொம்மிடி, சின்ன சேலம், கோவை ஜே.என்., கோயம்புத்தூர் வடக்கு, குன்னூர், ஈரோடு ஜே.என்., கரூர் ஜன., மேட்டுப்பாளையம், மொரப்பூர், நாமக்கல், போத்தனூர்., சேலம், சமல்பட்டி, திருப்பத்தூர், திருப்பூர், உதகமண்டலம்.

தெற்கு ரயில்வேயின் சேலம் கோட்டத்தில் அமிர்த பாரத் ரயில் நிலையத் திட்டத்தின் கீழ் ரயில் நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் நல்ல வேகத்தில் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் சேலம் கோட்டத்தின் சமல்பட்டி ரயில் நிலையப்பணிகள்நிறைவடைந்துள்ளன.

அமிர்த் பாரத் ஸ்டேஷன் திட்டத்தின் கீழ் உள்ள நிலையங்களின் மேம்பாடு, மேம்படுத்தல், நவீனமயமாக்கல் பொதுவாக திட்டத் தலைப்பு 53 வாடிக்கையாளர் வசதிகள்’ கீழ் நிதியளிக்கப்படுகிறது. சேலம் கோட்டம் தெற்கு ரயில்வேயின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது. இந்த மண்டலத்திற்கு 2025 26 நிதியாண்டில், திட்டத் தலைப்பு 53ன் கீழ் 1,122 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (ஜூன் வரை) இதுவரை 240 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

போத்தனூர் சந்திப்பில் புதிய கோச்சிங் டெர்மினல் 98.67 கோடி செலவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. ரயில்வே திட்டப்பணிகளை முடிப்பது என்பது மாநில அரசின் நிலம் கையகப்படுத்துதல், வனத்துறை அதிகாரிகளின் வன அனுமதி, விதி மீறல் பயன்பாடுகளை மாற்றுதல், பல்வேறு அதிகாரிகளின் சட்டரீதியான அனுமதிகள், புவியியல் மற்றும் நிலப்பரப்பு நிலைமைகள், திட்டத்தின் பகுதியில் சட்டம் ஒழுங்கு நிலைமை, ஒரு வருடத்தில் வேலை செய்யும் மாதங்கள் போன்ற பல்வேறு காரணிகளைப் பொறுத்தது என்று கூறினார்.

## இந்திய அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சிக் கவுன்சில் (CSIR) உருவாக்கிய

# தொழில்நுட்பங்களை அணுகுவதில் ஏதேனும் சிக்கல்கள் கண்டறியப்பட்டுள்ளதா?

## மக்களவையில் - கே.இ.பிரகாஷ் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 27-

இந்திய அறிவியல் மற்றும் தொழில் துறை ஆராய்ச்சி கவுன்சிலால் (CSIR) உருவாக்கிய தொழில்நுட்பங்கள் குறித்து ஈரோடு மக்களவைத் தொகுதி மக்கள் மத்தியில் விழிப்புணர்வு, பயன்பாடு & இந்த தொழில்நுட்பங்களை அணுகுவதில் ஏதேனும் சிக்கல்கள் கண்டறியப்பட்டுள்ளதா? கண்டறியப்பட்டிருந்தால் துறை வாரியான தகவல் வழங்க? (MSME, ஜவுளி, விவசாயம் போன்றவை)

CSIRHARIT (Harnessing Appropriate Rural Interventions and Technologies) திட்டத்தின் கீழ், ஈரோட்டில் ஒரு Regional Innovation Outreach Hub அல்லது Satellite Facilitation Centre அமைக்கும் திட்டம் அமைச்சகத்திடம் உள்ளதா?

மாவட்ட அடிப்படையில் CSIR தொழில்நுட்பங்களின் பயன்பாடு மற்றும் விளைவுகளை கண்காணிக்க டாஷ்போர்டு அல்லது வேறு ஏதேனும் முறை அமைச்சகத்திடம் உள்ளதா? இருப்பின், ஈரோடு தொடர்பான தரவுகள் பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்படுமா என்று மக்களவையில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

பொதுமக்களுக்குச் எளிதில் சென்றடைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்துக் குட்பட்ட CSIR ஆய்வகங்கள் உருவாக்கிய தொழில்நுட்பங்கள் மற்றும் பொருட்கள் மிகுந்த விளம்பரங்களுடன் பிரபலப்படுத்தப்படு கின்றன. இதற்காக சமூக ஊடகங்கள், கண்காட்சிகள், கருத்தரங்குகள், மாநில, தேசிய, சர்வதேச நிகழ்ச்சிகள், தொழில் சந்திப்பு, “ஒரு வாரம் ஒரு ஆய்வகம்” (One Week One Lab - OWOL), “ஒரு வாரம் ஒரு கருப்பொருள்” (One Week One Theme - OWOT) போன்ற சிறப்பு பிரச்சாரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. இந்த முயற்சிகள் ஆய்வக மட்டத்திலும் தலைமையக மட்டத்திலும் நடைபெறுகின்றன, நாடுமுழுவதும் தொழில்நுட்பங்கள் பரவும்படி செயல்படுகின்றன. மேலும், தொழில்நுட்பங்கள் மற்றும் பொருட்கள் தனியார் மற்றும் பொது துறைகளால் பயன்படுத்தப் படுவதற்காக, ஒவ்வொரு ஆய்வகத்திலும் தலைமையகத்திலும் ட்தனித்துவமான வணிக மேம்பாட்டு குழுக்கள் (Business Development Groups - BDGs) செயல்பட்டு வருகின்றன.

CSIR அமைப்புகள் உருவாக்கும் அளவிடக்கூடிய தகவல்கள் (Quantifiable Outputs) “DARPAN” என்ற இணையதளத்தில் பதிவாகின்றன. இது “Dashboard for Analytical Review of Projects Across the Nation” எனப்படும் தேசிய அளவில் திட்டங்க ளுக்கான கணக்காய்வு டாஷ்போர்டாகும். இதனை https://dsir.dashboard.nic.in என்ற இணையதள முகவரியில் காணலாம். இதில் பின்வரும் விவரங்கள் இடம் பெறுகின்றன: உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் (Technologies) (உதாரணமாக TRL6 மற்றும் அதற்கும் மேற்பட்டவை, உரிமம் அளிக்கப்பட்டவை, வணிகரீதியாக பயன்பாட்டுக்கு வந்தவை), தேசிய மற்றும் சர்வதேச உடன்படிக்கைகள் (MoUs & Agreements), நடப்பில் உள்ள திட்டங்கள், காப்புரிமைகள் (Patents) மற்றும் ஆய்வு வெளியீடுகள் (Publications) உள்ளிட்டவை என அறிவியல் மற்றும் தொழில் நுட்ப ஒன்றிய அமைச்சர் கூறினார். ஒன்றிய அரசு, தொகுதி அடிப்படையிலான எந்தவிதமான தகவல்களையும் வழங்காமல், திட்டங்களுக்கான பொது இணையதள முகவரி ஒன்றை வழங்கியுள்ளது. இது மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியது.

இப்படியான சீரற்ற பதில்கள் இருந்தால், தொகுதி அல்லது மாநில அளவில் திட்டங்களின் தாக்கத்தை அரசு எப்படி மதிப்பீடு செய்ய முடியும்? என்பது மிகவும் கேள்விக்குறியதாக உள்ளது.

திட்டத்தின் பயன்பாடு, முன்னேற்றம் மற்றும் அதன் விளைவுகள் குறித்து தொகுதி & மாவட்ட அடிப்படையில் தகவல் இல்லாமல், ஒருங்கிணைந்த திட்ட மதிப்பீடு செய்வது சாத்தியமில்லை என்று ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் கூறினார்.





முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (26.7.2025) சென்னை, கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் ‘மக்கள் சேவை மையத்தின் (Citizen Service Centre)’ முன்னேற்றப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ. மகாவிஷ்ணு, ராஜமகேஷ்குமார், பாலமுருகன், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, வள்ளுவர் குருகுலம் பள்ளியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காலை உணவு திட்டத்தினை துவக்கி வைக்க உள்ளார்கள். அதற்கான முன்னேற்பாடு பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.